(6 Pages) **Reg. No. :** ......................................

**Code No. : 7347** **Sub. Code : PTLM 31**

M.A. (CBCS) DEGREE EXAMINATION,
NOVEMBER 2020.

Third Semester

Tamil — Core

காப்பிய இலக்கியம்

(For those who joined in July 2017 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. கம்பர் தம் நூலுக்கு இட்ட பெயர்

   (அ) இராமகீதம்

   (ஆ) இராமகாதை

   (இ) சீதையின் இராமன்

   (ஈ) இராகவ காவியம்

2. மணநூல் என்று பாராட்டப் பெற்ற நூல்

(அ) சூடாமணி

(ஆ) விவேக சிந்தாமணி

(இ) சூளாமணி

(ஈ) சீவக சிந்தாமணி

3. திங்கள் முகிலோடும் சேண்நிலங் கொண்டெனச் செங்கண் சிவப்ப அழுதவள்

(அ) மாதரி (ஆ) மாதவி

(இ) கண்ணகி (ஈ) ஐயை

4. மன்னவன் மகனுக்கே அல்லாமல் புகார் நகருக்கும் துன்பம் உண்டாகக் கூடும் என்று குறிப்பறிந்து கூறியவள்

(அ) ஐயை (ஆ) கண்ணகி

(இ) மாதரி (ஈ) சித்திராபதி

5. தண்டியடிகள் கண்ணொளி பெறக் காரணமாக அமைந்தது

(அ) திருநீறு

(ஆ) திருவைந்தெழுத்து

(இ) உத்திராக்கம்

(ஈ) முப்புரிநூல்

6. சிவபெருமானின் நெற்றிக் கண்களிலிருந்து தோன்றிய நெருப்பினை இறுதியில் சுமந்தது

(அ) கார்த்திகைப் பெண்கள்

(ஆ) இந்திரன்

(இ) சரவணப் பொய்கை

(ஈ) தேவர்கள்

7. சுக்கிரீவனின் தந்தை பெயர்

(அ) திருமால் (ஆ) சூரியன்

(இ) இந்திரன் (ஈ) வாயு பகவான்

8. மானிடர்கள் விண்மீன்களையுடைய விண்வீட்டிற்கு ஏறிச் செல்வதற்கு வழியாக அமைந்த பெருமையுடையது

(அ) எருசலேம் (ஆ) இத்தாலி

(இ) எகிப்து (ஈ) இந்தியா

9. பசித்த மக்கள் சிறிது கூழ் தேடுங்கால் பானை ஆர வெண் சோறு காண்பது எதற்குச் சமம்

(அ) சோலையைக் காண்பதற்கு

(ஆ) சூரியனைக் காண்பதற்கு

(இ) குளிர் நதியைக் காண்பதற்கு

(ஈ) வெண்நிலவைக் காண்பதற்கு

10. 'இன்னமும் நீ பட்டறிவுப் பானையில் பாதி வெந்த பருக்கை' என்று வாலியால் குறிப்பிடப்படுபவர்

(அ) இந்திரசித்து (ஆ) மகோதரன்

(இ) இராவணன் (ஈ) கும்பகருணன்

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.

11. (அ) சிலப்பதிகாரத்தின் சிறப்புகள் சிலவற்றைக் கூறுக.

(அல்லது)

(ஆ) ஐஞ்சிறு காப்பியங்களை அறிமுகம் செய்க.

12. (அ) கோவலனின் நல்லறப்பண்புகளை மாடலன் வெளிப்படுத்திய பாங்கினை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) வேடனுக்குச் சீவகன் கூறிய அறிவுரையாது? எடுத்தியம்புக.

13. (அ) தண்டியடிகள் பற்றிய அறிமுகம் சேக்கிழாரால் எவ்வாறு இயம்பப்பட்டுள்ளது? கூறுக.

(அல்லது)

(ஆ) திருக்குமரன் வேண்டி சிவனைத் துதித்த தேவர்களின் பக்தித் திறத்தை விளக்குக.

14. (அ) எருசலேம் நகர மதிலின் சிறப்பினை உரைக்க.

(அல்லது)

(ஆ) கதீஜா கண்ட கனவினையும் அதன் பயனையும் கூறுக.

15. (அ) உதாரனனும் அமுதவல்லியும் தம் காதல் நினைவை எவ்விதம் வெளிப்படுத்தினர்? கூறுக.

(அல்லது)

(ஆ) ஜடாயு பறவையின் அன்பினையும் நட்பினையும் வாலியின் கவிதை வரி கொண்டு விளக்குக.

பகுதி இ — ($5 \times 8 = 40$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.

16. (அ) தமிழ்க் காப்பியங்களின் வளர்ச்சியினையும் வாழ்வியலையும் தொகுத்து எழுதுக.

(அல்லது)

(ஆ) தமிழ்க் காப்பியங்களின் சமயச் சார்பினை விரிவாக எழுதுக.

17. (அ) தன் கணவன் கள்வனல்லன் என்று கண்ணகி வழக்கார வென்ற நிகழ்வைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) ஆபுத்திரன் மணிபல்லவம் அடைந்த நிகழ்வினைத் தொகுத்தெழுதுக.

18. (அ) தண்டியடிகளின் பக்தித் திறம் புலப்படும் நிகழ்வினை விரிவாகக் கூறுக

(அல்லது)

(ஆ) திருமுருகன் தோற்றத்தினைக் கந்தபுராணம் வழி நின்று விளக்குக.

19. (அ) எருசலேம் நகரத்தின் சிறப்பியல்புகளை எடுத்தியம்புக.

(அல்லது)

(ஆ) நபிகள் நாயகத்தின் திருமண நிகழ்வினை விளக்கமாக எழுதுக.

20. (அ) உதாரன்-அமுதவல்லி காதலினைப் புரட்சிக்கவிஞர் கவிவழிப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) இலங்காபுரியையும் இராவணனையும் வாலி எங்ஙனம் சிறப்பிக்கின்றார்? விளக்குக.

———————